**தலைப்பு 417 – தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஜூன் 30 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் தேசிய கணக்காய்வு அறிக்கை 2021 ஜூலை 20 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ் அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களில் இருந்தான தாக்கத்தை தவிர்த்து 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக ஆக்கப்பட்டுள்ளது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு

அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும்

சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு புதிய அமைச்சு ஒன்றாக காணப்பட்டதால் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்க வேண்டிய தேவை இருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **முற்பணப் பெறுவனவுகள்**<br>SA 52 இன் படி முற்பணம் பெறுவனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 8,684,240 தொகை எனினும், ரூபா 8,955,958 என காட்டப்பட்டிருந்தமையால் முற்பணப் பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 271,718 தொகை குறைவாக நிதிச் செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்தது. | முற்பணப் பெறுவனவுகளின் பெறுமதி ரூபா 271,718 இற்கான மீதி குறைவாக காணப்பட்டுள்ளமை முற்பணக் கணக்கு 417012 செலவுத் தலைப்பு 267 இன் கீழ் 2020 மார்ச் மாதம் ரூபா 143,400 தொகை மேற்கொள்ளப்பட்ட வரவு வைத்தல் மற்றும் செலவுத் தலைப்பு 269 இன் கீழ் 2020 ஜுன் மாதம் ரூபா 128,318 தொகை மேற்கொள்ளப்பட்ட வரவு வைத்தல் காரணமாக ஏற்பட்டிருந்ததென அறிவிக்கின்றேன். | திறைசேரி அச்சுப் பிரதியை அடிப்படையாகக் கொண்டு சரியான முறையில் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) கணக்குப் பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மாதாந்த கணக்குப் பொழிப்பில் ஏனைய பெறுவனவுகள் (230099) என வீடமைப்புக் கடன் மீண்டும் அறவீடு செய்தல் காட்டப்பட்டிருந்ததுடன் அவற்றில் நிதிசார் பெறுவனவு ரூபா 9,192,895 தொகை மற்றும் குறுக்குப் பதிவு மூலம் ரூபா 7,565,041 தொகையாக மொத்தக் கூட்டுத்தொகை ரூபா 16,757,936 தொகை அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. எனினும் SMEHCI/03/Gov.Audit/GEN/2021(ii)(2) இலக்கம் கொண்ட மற்றும் 2021 ஏப்ரல் 08 திகதிய மேலதிக செயலாளர்(அபிவிருத்தி) கடிதத்தின் படி மொத்த அறவீடுகள் ரூபா 7,782,538 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 8,975,398 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது. | பதில் அனுப்பியிருக்கவில்லை. | - கடன் அறவீடுகள் தொடர்பான தகவல்கள் சரியான முறையில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**1.6.2 ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) திறைசேரிப் புத்தகங்கள் மற்றும் திணைக்களப் புத்தகங்களை இணக்கம் செய்யும் போது ஏஸீஏ – 6 படிவத்தின் படி ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களில் அடங்கியுள்ள 6112201 இலக்கத்தின் கீழ் ஆண்டின் போது கொள்வனவு செய்தல் ரூபா 500,000 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. அதன் காரணமாக ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் ஒதுக்கக் கணக்கில் மீதியும் அப் பெறுமதியினால் மிகையாக காட்டப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | ரூபா 500,000 தொகை ஆகிய மேலதிக மீதிக்கான காரணம் அரச கணக்குத் திணைக்களத்தினால் அறிவித்தல் ஏதும் இன்றி வழங்கியிருந்த தொகை ஒன்றென அறிவிக்கின்றேன். இந்த தவறை சரி செய்வதற்கு உரிய கடிதங்கள் குறிப்பிட்ட பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன. | சரியான முறையில் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சின் சொத்துக்கள் தனதாக்கல்களின் போது செலவுத் தலைப்புகளின் மூலம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த செலவு ரூபா 3,704,616 தொகை எனினும் நிதிக் கூற்றுக்களில் ஏஸீஏ-6 படிவத்தின் படி ஆண்டின் போது கொள்வனவுகள் என ரூபா 3,140,716 தொகையும் மற்றும் திறைசேரியின் நிதி அல்லாத சொத்துக்கள் பொழிப்பு அறிக்கையின் படி சொத்துகள் கொள்வனவுகள் என ரூபா 2,640,716 தொகையுமாக காணப்பட்டது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | திறைசேரியின் அச்சுப் பிரதியின் அடிப்படையில் சரியான முறையில் நிதிக் கூற்றுக்களின் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.3 முற்பணக் கணக்கு மீதிகள்

முற்பணக் கணக்குகளில் வருட இறுதியில் உள்ளவாறு மீதிகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | SA 52 படி முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 41,612,297 தொகை எனினும் ரூபா 6,660,541 தொகை என நிதி செயலாற்றல் கூற்றில் காட்டப்பட்டிருந்த காரணத்தினால் முற்பணக் கொடுப்பனவு ரூபா 40,945,756 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | வருட இறுதியில் உள்ளவாறு திறைசேரி அச்சுக் கணக்கு அறிக்கையின் படி மற்றும் அமைச்சினால் தயாரிக்கப்பட்டிருந்த இறுதிக் கணக்கு அறிக்கையின் படி அமைச்சிற்கான முற்பணக் கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூபா 6,660,541 ஆகிய பெறுமதி சரியாக காணப்படுவதுடன் இந்த பெறுமதிகள் சமப்பட்டது எனவும் அறிவிக்கின்றேன். | திறைசேரியின் அச்சுப் பிரதியின் அடிப்படையில் சரியான முறையில் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | திறைசேரிப் புத்தகங்களின் படி ஆண்டின் போது வரவு வைத்தல்கள் ரூபா 35,636,499 தொகை மற்றும் செலவு வைத்தல்கள் ரூபா 1,557,251 தொகை எனினும் ஏஸீஏ-5 முற்பணக் கணக்குடன் தொடர்புடைய 8493/0/0/0417/0/012 இலக்கத்தின் கீழ் ஆண்டின் போது வரவு வைத்தல்கள் என ரூபா 684,743 தொகை மற்றும் செலவு வைத்தல் என ரூபா 1,828,969 தொகை காட்டப்பட்டிருந்தது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | திறைசேரியின் அச்சுப் பிரதியின் அடிப்படையில் சரியான முறையில் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.6.4 கட்டுநிதி மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஏஸீஏ-3 இன் கீழ் கட்டுநிதி கணக்கில் கட்டுநிதிகளின் கீழ் ஏனைய மூலங்களில் இருந்து பெறுவனவுகள் என ரூபா 27,939,559 தொகை காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் ரூபா 28,793,782 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் ரூபா 854,223 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. அந்த அதிகரிப்பு மாதாந்த கணக்கு பொழிப்புகளில் ஜூலை மாதத்தில் ஏனைய மூலங்களின் மூலம் பெறுவனவுகள் மிகையாக பதிவு செய்யப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. | பதில் வழங்கியிருக்கதவில்லை. | திறைசேரியின் அச்சுப் பிரதியின் அடிப்படையில் சரியான முறையில் தகவல்கள் உட்படுத்தப்பட வேண்டும். |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | **மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்படல்** 417-01-01-2002 கொண்ட மூலதனச் செலவு விடயத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் ரூபா 925,000 தொகையாக இருந்ததுடன், அந்த மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது. | இறுதிக் காலாண்டிற்காக பாதீட்டு மதிப்பு தயாரிக்கும் போது தேசிய பாதீட்டுத் திணைக்களத்தினால் தவறுதலாக 417-01-01-2003 செலவு விடயத்திற்கு உரிய செலவு இந்த செலவு விடயத்துடன் கூட்டப்பட்டமையால் ஏற்பட்டிருந்த சேமிப்பாகும். | மாற்றங்களை கண்டறிந்து சரியான முறையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | ஆரம்ப செலவு மதிப்பீடு மற்றும் திருத்திய செலவு மதிப்பீடு தயாரிக்கும் போது 09 செலவு விடயங்களின் முரண்கள் மறை 100 சதவீதம் முதல் நேர் 21 சதவீதத்திற்கு இடைப்பட்ட வீச்சில் மாற்றமடைந்திருந்தது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | உரிய மதிப்பீடுகள் சரியான முறையில் தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பொறுப்புகள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் பதிவு செய்யப்பட்டிருக்காத 2020 ஆண்டிற்கான பொறுப்புக்கள் ரூபா 6,672,415 தொகை 2021 ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் அவ்வாறு ஏற்படாமல் நடவடிக்கை எடுக்கும் படி உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. | நடைமுறை ஆண்டிற்கான அனைத்து பொறுப்புக்கள், பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் சரியாக உட்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 11 செலவு விடயங்களின் சேமிப்புக்களை கவனத்தில் எடுக்காமல் ரூபா 6,085,170 இற்கான ஏற்பாடுகளை மிகைத்து பொறுப்புக்களுக்கான கடப்பாடுகளை ஏற்படுத்தியிருந்தது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | நடைமுறை ஆண்டிற்கான பொறுப்புக்கள் தொடர்பான ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் ஏற்படுத்தும் போது உரிய செலவு விடயங்களில் சேமிப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பொறுப்புக்கள் பதிவேட்டில் ஸிகாஸ் பிரதியில் காணப்படாத ரூபா 1,137,489 இற்கான பொறுப்புக்கள், ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உட்படுத்தியிருக்கவில்லை. | அரச கணக்குத் திணைக்களத்தினால் 2020 ஆண்டு இறுதியில் CIGAS கணினி நிகழ்ச்சித் திட்டம் நாளதுவரை ஆக்கப்பட்டுள்ளது. அவ்வாறு நாளாதுவரை ஆக்கும் போது எமது அமைச்சுக்குரிய பொறுப்புக்கள் பதிவேட்டில் ரூபா 1,137,489 தொகை பெறுமதியான பல விடயங்கள் தவறியிருந்தன. பின்னர் எம்மால் அவை அவதானிக்கப்பட்டு அரச கணக்கு திணைக்களத்திற்கு அறிவித்து மீண்டும் பொறுப்புக்கள் பதிவேட்டில் சேர்க்கப்பட்டது. | ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதான கூற்றில் சரியாக தகவல்கள் உட்படுத்தப்பட வேண்டும். |

### 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள மூன்று உத்தியோத்தர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 258,250 இற்கான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் 2021 மார்ச் 22 வரை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இடமாற்றம் பெற்றுச் செல்லும் உத்தியோகத்தர் தொடர்பாக புதிய சேவை நிலையத்திற்கு அறிவித்து குறிப்பிட்ட கடன் மீதிகளை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் மீதிகளை விரைவாக அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | சேவையை விட்டு விலகிச் சென்றுள்ள அல்லது வேலை இடைநிறுத்தப்பட்டுள்ள ஊழியர்களிடம் பெற வேண்டிய 02 வருடங்கள் மற்றும் 04 வருடங்கள் இடைப்பட்ட காலம் முதல் காணப்படும் ரூபா 326,582 இற்கான நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய தொகையினை அறவீடு செய்வதற்காக தாபனக் கோவையின் அத்தியாயம் XVIV பிரிவு 4.6 இன் பிரகாரம் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | - மேற்படி - |
| (இ) | சேவையை விட்டுச் சென்றுள்ள ஊழியர் ஒருவரிடம் அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 60,630 இற்கான கடன் மீதி 02 வருடங்களை விட மிகையாக காலம் முதல் அறவீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | அமைச்சின் அரசாங்க உத்தியோகத்தர்களிற்கான முற்பணங்களின் செலவுகளின் உச்ச எல்லை ரூபா 23,700,000 தொகை எனினும், ஆண்டின் போது மொத்தச் செலவுகள் ரூபா 5,975,798 தொகை அதாவது சுமார் 25 சதவீதம் ஆகும். | ஏற்பாடுகள் கிடைக்கப் பெறுவது காலாண்டு அடிப்படையாக இருந்ததுடன், ஏற்பாடுகள் சேமிக்கப்படின் அடுத்த காலாண்டிற்காக பயன்படுத்துவதற்கு முடியாமையால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டதென அறிவிக்கின்றேன். | முற்பணக் கணக்குகளின் எல்லைகள் தொடர்பாக கவனம் செலுத்தி முற்பணக் கணக்கு அலுவல்கள் செயற்படுத்த வேண்டும். |

## 2.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்கியிருக்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காட்டப்பட்டுள்ளது.

| | அவதானிப்புக்கள் | | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங் களுடன் தொடர்பு | இணக்கமின்மை | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| | (i) நிதிப் பிரமாணம் 501(இ) மற்றும் 502(ஆ) | பொது மக்களுக்கு வழங்கப்படும் கடன் தொகை, முழுத் தொகையும் திருப்பி அறவிடப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்துவதற்காக பெறவேண்டிய தொகையை தாமதம் இன்றி அறவீடு செய்வதற்கும், உரிய விடயங்களில் திருப்திகரமான முன்னேற்றம் ஒன்றை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக மேற்பார்வை ஒன்றை மேற்கொள்வதற்கும் உரிய அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் பதிவு செய்யப்பட்டு வைத்திருப்பதற்காக முறையான கடன் பதவேடொன்று பேணிச் செல்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கியிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| | (ii) நிதிப் பிரமாணம் 571(3) | 6000-0-0-13-0088-0 வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்த ரூபா 452,776 இற்கான பெறுமதி தொடர்பாக உரிய கணக்கிற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது திருப்பி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 2017.04.11 திகதி ஒரு மாதத்தினுள் விண்ணப்பிக்காவிடின் அரசாங்க வருமானத்திற்கு செலவு வைக்கப்படும் என வைப்புச் செய்தவருக்கு அறிவிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டது. | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | 6000-0-0-16-0082-0 வைப்புக் கணக்கில் காட்டப்பட்டிருந்த ரூபா 47,075,764 இற்கான பெறுமதி தொடர்பாக உரிய கணக்கிற்கு அல்லது அரசாங்க வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு அல்லது திருப்பி செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 6,559 தொகை 2021 ஆண்டின் போது அரசாங்க வருமானத்திற்கும் செலவு வைப்பதற்கும் ரூபா 2,924 தொகை கொடுப்பனவு செய்வதற்காக ரூபா 6,396 இற்கான வைப்பொன்று உரிய நிறுவனத்திற்கு அனுப்பும் படி அறிவிப்பதற்கும் ரூபா 40,416 இற்கான வைப்பொன்று வைப்புச் செய்தவர் விண்ணப்பிக்காத போது அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படும் என அறிவிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. மீதியாக உள்ளவை கடந்த ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டு வேலைகள் பூர்த்தி செய்யப்படாமல் காணப்படும் நிர்மாணவேலை செயற்திட்டங்களின் கொடுப்பனவுகள் தொடர்பாக கழிக்கப்பட்ட தடுத்து வைத்தல் பணமாக காணப்பட்டதுடன், அவற்றை தீர்த்து வைப்பதற்காக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | |
| (iii) நிதிப் பிரமாணம் 104 (4) | ஆரம்ப விசாரணையின் பின்னர் நட்டங்கள் மற்றும் சேதங்கள் ஏற்பட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் முழுமையான அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் விபத்து ஏற்பட்டிருந்த PH – 0177, PG – 1440 மற்றும் CAR – 5030 ஆகிய வாகனங்கள் தொடர்பாக அவ்வாறு செய்திருக்கவில்லை. | தேவையான பொலிஸ் அறிக்கைகள் தாமதம் அடைந்ததால் முழுமையான அறிக்கை வழங்குவதற்கு தாமதம் ஏற்பட்டுள்ளதுடன், இந்த முழுமையான அறிக்கை 03 மாதங்களுக்குள் வழங்குவதற்காக குறித்துக்கொண்டேன். | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) நிதிப் பிரமாணம் 104(4), 106(3) மற்றும் 109(1) | - 2015 ஆண்டில் விபத்துக்குள்ளாகிய CAJ-4341 மற்றும் JY-2971 ஆகிய வாகனங்கள் தொடர்பான நட்டம் 2020 திசெம்பர் 31 திகதி வரை திறைசேரியில் இருந்து பணம் ஒதுக்கி கணக்குகளில் இருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நட்டத்தை நிறப்புவதற்காக ஏற்பாடுகள் என ரூபா 100,000 என தொகையொன்று 2021 ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. JY-2971 கப் வண்டியின் நட்டமாகிய ரூபா 68,641 தொகை ஏடுகளில் இருந்து பதிவழித்தல் தற்போது மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன், அந்த நட்டத்தை கணக்கீடு செய்வதற்கும் மற்றும் CAJ-4341 கார் வண்டிக்கான நட்டம் ரூபா 14,450 தொகையை ஏடுகளில் இருந்து பதிவழித்து கணக்கீடு செய்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்கப்படும் என அறிவிக்கின்றேன். | - மேற்படி - |
| | - இரண்டு எழுதுனர் மேசைகள் காணாமல் போதல் தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 திகதி வரை அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நட்டம் ரூபா 25,935 தொகை என இனங் கண்டிருந்ததுடன் அந்த நட்டத்தை புத்தகங்களில் இருந்து பதிவழிப்பதற்கு குழு ஒன்று நியமிக்கப்பட்டு ஆரம்ப விசாரனையின் பின்னர் நிதிப் பிரமாணம் 104(4), 106(3) மற்றும் 109(1) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கின்றேன். | - மேற்படி - |
| | - மூன்றாம் தரப்பினருக்கான காப்பறுதி மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்த இலக்கம் JY-2916 கொண்ட வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த விபத்து காரணமாக செலவிடப்பட்டிருந்த ரூபா 1,032,130 இற்கான தொகை பிரதிப் பணிப்பாளர் நாயகம் மற்றும் சாரதியிடம் அறவீடு செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் | இலக்கம் JY-2916 கொண்ட வாகனத்தின் திடீர் விபத்தினால் ஏற்பட்ட நட்டம் ரூபா 1,032,130 தொகையினை சாரதியிடம் அறவீடு செய்வதற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. சாரதி அந்த விலாசத்தில் வதியாமையால் கடிதம் திரும்ப அமைச்சுக்கு கிடைத்துள்ளது. எனினும், இந்த சாரதி தற்போது அமைச்சுச் சேவையில் இல்லாததுடன் இது தொடர்பாக சட்ட | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 31 திகதி வரை பணம் ஏதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கை எடுப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | |
| | | - இலக்கம் KB-9614 கொண்ட வாகனத்திற்கு ஏற்பட்டிருந்த விபத்து தொடர்பான நட்டம் ரூபா 89,759 இற்கான அரசுக்கு ஏற்பட்டிருந்த நட்டத்தை சாரதியிடம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இலக்கம் KB-9614 கொண்ட வாகனத்தின் திடீர் விபத்தின் பின்னர் ஏற்பட்டிருந்த நட்டம் ஆகிய ரூபா 89,759 தொகையினை செலுத்தும் படி 03 சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டது. அமைச்சரின் பதவியணியில் இணைக்கப்பட்டு சேவையாற்றிய இந்த சாரதி தற்போது அமைச்சுச் சேவையில் இல்லாததுடன், இது தொடர்பாக சட்டமா அதிபரின் அறிவுரை பெற்றுக்கொள்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (v) | நிதிப் பிரமானம் 702 | பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு நிதியம் (பீஎச்டீடீ) நிர்மாண வேலை ஒப்பந்த வேலை வழங்கும் போது சட்டமா அதிபரினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த படிவங்களில் கையொப்பமிட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்திருக்கவில்லை. | பெருந்தோட்ட மனித அபிவருத்தி நம்பிக்கை பொறுப்பு நிதியம் 2020.08.09 திகதி அதிவிஷேட வர்த்தமானியில் பக்க இலக்கங்கள் 19A, 20A அமைச்சின் கீழுள்ள நிறுவனம் ஒன்று என வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டது. அதன் படி அமைச்சின் அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு அங்கீகாரம் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. | - மேற்படி - |
| (vi) | நிதிப் பிரமாணம் 702(3) | அமைச்சினால் கையொப்பமிடப்பட்ட அனைத்து ஒப்பந்த வேலை உடன்படிக்கையின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | ‘‘பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு நிதியம்’’ இனால் உரிய தோட்ட கூட்டுரவு சங்கத்துடன் அணுகியிருந்த ஒப்பந்த வேலை உடன்படிக்கையின் பிரதிகள் எதிர்காலத்தில் கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பேன். இந்த அமைச்சுக்குரிய நேரடியாக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | | காணப்படும் ஒப்பந்த வேலை உடன்படிக்கையின் பிரதிகளும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | |
| (vii) நிதிப் பிரமாணம் 237(அ)(iii) | ரூபா 5,149,696 இற்கான தடுத்து வைத்தல் பணம் உரிய அதிகார சபையின் கவனத்தை ஈர்க்காமல் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. கண்டி பாதை செயற்திட்டத்திற்காக நிறுவனம் ஒன்றிற்கு இறுதி பில் பத்திர பெறுமதி என தடுத்து வைத்தல் பணம் கழிக்காமல் ரூபா 86,620 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | அபிவிருத்தி செயற்திட்ட கட்டங்களின் நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்த பின்னர் ''பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால்'' அமைச்சுக்கு பில் பத்திரங்கள் அனுப்பப்படுவதுடன், அதன் பின்னர் அமைச்சின் தொழில்நுட்ப உத்தியோத்தர்களினால் நிறைவேற்றப்பட்டுள்ள வேலைகளை மேற்பார்வை செய்த பின்னர் அமைச்சின் உசாத்துணை பொறியியலாளர் மற்றும் செயற்திட்ட பொறியியலாளரினால் மேற்கொள்ளப்படும் பரிந்துரை மீது மாத்திரம் தற்போது கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. எதிர்காலத்திலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படும் என கருணையுடன் அறிவித்துக்கொள்கின்றேன். | - மேற்படி - |
| (viii) நிதிப் பிரமாணம் 756, 757 மற்றும் 1647(ஆ) | வாகனங்கள் மற்றும் மேலதிக உபகரணங்கள் தொடர்பாக வருடாந்தம் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், வாகனம் ஒன்றின் உரிமை மாற்றமடையும் அனைத்து சந்தர்ப்பங்களிலும் வாகனத்தின் பாதுகாப்பு ஒப்படைக்கபட்டவுடன், அவ்வாறான கணிப்பீடொன்று நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும் 2016 முதல் 2020 வரை அவ்வாறு மேற்கொண்டிருக்கவில்லை. | தற்போது அமைச்சின் போக்குவரத்துப் பிரிவினால் உரிய தகவல்கள் கணக்குப் பிரிவிற்கு அனுப்பப்பட்டு உள்ளதுடன், வாகன கணிப்பீடு தொடர்பாக தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | - மேற்படி - |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை இலக்கம் 30/2016 இன் 3.31 பந்தி | அமைச்சின் வாகனங்கள் தொடர்பாக 2016 ஆண்டு முதல் 2020 திசெம்பர் 31 திகதி வரை எரிபொருள் பரிசோதனை மேற்கொண்டிருக்கவில்லை. | கூடிய விரைவில் இக் கருமத்தை நிறைவேற்றுவதற்கு குறித்துக்கொண்டேன். | பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | இலக்கம் 2/2018 கொண்ட 2018 ஆகஸ்ட் 18 திகதிய பொது நிதிச் சுற்றறிக்கையின் பந்திகள் 3 மற்றும் 6 | சுழல் நிதியம் உட்பட 13 நிதியங்களை மூடிவிடுவதற்கும் சுழல் நிதியத்திற்கு அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட கடன்களை அறவீடு செய்வதற்கும் 2020 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | பதில் வழங்கியிருக்கவில்லை. | - மேற்படி - |

### 2.5 முற்பணங்கள் வழங்கல் மற்றும் தீர்த்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிறைவேற்று அல்லாத உத்தியோகத்தர் ஒருவருக்கு உச்சமட்ட எல்லையை கவனத்தில் எடுக்காமல் ரூபா 133,000 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், மேலும் பெண் உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 68,300 இற்கான முற்பணம் குறிப்பிட்ட விடயம் முடிவடைந்து 107 நாட்கள் மற்றும் 112 நாட்கள் தாமதமாக தீர்த்திருந்தது. | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் உத்தியோகத்தர்களுக்கு முற்பணம் வழங்கும் போது விஷேட கவனம் செலுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கும் படி உரிய தினத்தில் முற்பணங்களை அறவீடு செய்யும் படியும் உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. | முற்பணம் வழங்கும் போது நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும். |
| (ஆ) | இரண்டு உத்தியோகத்தர்களினால் பெற்றிருந்த ரூபா 20,000 இற்கான மற்றும் ரூபா 112,500 இற்கான முற்பணங்கள் 173 நாட்கள் மற்றும் 143 நாட்கள் கால தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | துணைக் கட்டுநிதி என மாக்பெட் நிறுவனத்தின் உத்தியோகத்தர் ஒருவருக்கு எரிபொருளுக்காக ரூபா 200,000 ற்கான முற்பணம் ஒன்றும் வேறொரு நிறுவனத்திற்கு ரூபா 100,000 ற்கான முற்பணம் ஒன்றும் வழங்கியிருந்ததுடன், அந்த முற்பணங்கள் 243 நாட்கள் தாமதமாக தீர்க்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 இலக்கம் கொண்ட பொது நிதிச் சுற்றறிக்கையின் 03 பந்தியின் படி செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட வேண்டிய ஆண்டிற்கான நாளதுவரை ஆக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்புக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணி தொடர்பான விபரங்கள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நாளதுவரை ஆக்கப்பட்ட நிறுவனத்தின் அமைப்பு கட்டமைப்பு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணி விபரங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட்ட 2020 செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் 2020 செயலாற்றல் அறிக்கையுடன் அனுப்பப்பட்டன. | பொது நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (ஆ) | அமைச்சின் பிரதான கருமம் ஒன்றான தோட்ட பிரஜைகள் சார் பிரஜை தலைமைத்துவம் மற்றும் பிரஜை பங்குகொள்ளலை முக்கியத்துவமாக கொண்ட பொதுசன ஆரம்ப சபைகள் நிறுவுதலும், நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளை நலன் பெறுவோருக்கு வழங்குதல் ஆகிய விடயங்கள் தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | பெருந்தோட்ட பிரஜைகளை அடிப்படையாகக் கொண்ட சபைகள் பொதுசன ஆரம்ப சபைகள் நிறுவுதல் 2021.10.06 திகதி வர்த்தமானி மூலம் அமைச்சுக்கு சாட்டப்பட்டது. பிரஜைகள் சன ஆரம்ப நிலையங்கள் நிறுவுவதற்காக தற்போது வரைபுகள் தயாரிக்கப்பட்டு சமசமூக தொடர்பாடல் வசதிகள் வழங்கும் உத்தியோகத்தர்களுக்கு அறிவுரை வழங்கி ஆரம்ப அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டன. | செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது முக்கிய கருமங்கள் தொடர்பாக உரிய கவனம் செலுத்தப்பட்டு தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 பணிப் பொறுப்புக்களை நிறைவேற்றாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செயல் நடவடிக்கைத் திட்டத்தில் புது வாழ்வு வீடமைப்புத் திட்டத்தில் 150 புதிய வீட்டு அலகுகள் சுவர் மட்டம் வரை நிர்மாணிப்பதற்கு திட்டமிப்பட்ட | நிலவிய கொவிட் 19 நிலைமை காரணமாக அந்த ஆரம்ப வேலைகள் எதிர்பாரத்தவாறு நிறைவேற்றிக்கொள்ள | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்த விடயங்கள் உச்சமட்ட செயற்திறனுடன் பூர்த்தி |

| | | |
|---|---|---|
| போதிலும் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு எந்தவொரு வீட்டினதும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. ஹட்டன் வலையத்தில் 91 வீடுகள் மற்றும் நுவரஎலிய வலையத்தில் 47 வீடுகளுக்காக வேலை ஆரம்பிக்கும் செலவு பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியத்திற்கு முகாமைத்துவக் கட்டணமாக கூட்டுத்தொகை ரூபா 27,840,000 தொகை செலுத்தப்பட்டிருந்தது. வருட ஆரம்பத்தில் திட்டமிடப்பட்டிருந்த இவ்விடயத்திற்காக திசெம்பர் மாதத்திலேயே பணம் வழங்கியிருந்தமையால் எதுவித கருமங்களும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | முடியாமல் போனது நிதி விண்ணப்பித்தல் வருட இறுதிவரை தாமதமாகியதால் வருட இறுதியில் பணம் விடுவிக்க நேரிட்டது. | செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டம் அடையப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 2020 ஜூன் 30 திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்த்த தொடர் வேலை வீடுகளின் எண்ணிக்கை 1710 ஆக இருந்தது. ரூபா 680.79 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முழுமையாக பூர்த்தி செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 700 ஆக காணப்பட்டதுடன், அவை எதிர்பார்த்த வெளியீட்டு மட்டத்தில் 40.9 சதவீத பௌதீக முன்னேற்றம் என அவதானிக்கப்பட்டது. | எதிர்பார்த்த பௌதீக இலக்குகளை அடைந்து கொள்வதற்காக போதியளவு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்காத போதிலும், ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளின் எண்ணிக்கையின் படி 100% சதவீத நிதி முன்னேற்றத்தினை பெற்றிருந்தது. அவ்வாறாயினும் நிலவிய கொவிட் நிலைமையின் மத்தியில் பிரயாண வரையறை விதிக்கப்படல் ஆகியவற்றின் காரணமாக நிர்மாண வேலைகளில் காணப்பட்ட தாமதங்கள் காரணத்தினால் சபையின் ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமையினால் எதிர்பார்த்த பௌதீக முன்னேற்றத்தை அடைந்துகொள்ள முடியாமல் போனது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்படும் கருமங்கள் உச்ச மட்ட செயற்திறனுடன் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை என்பவற்றை பரிசோதனை செய்த போது 03 நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 10 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டதுடன், 09 செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 1.7 சதவீதம் முதல் 58.58 சதவீதம் இடையே காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது. | நிலவிய கொவிட் சட்டதிட்டங்களின் படி அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் சமூக பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டமையால் எதிர்பார்த்த முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | - மேற்படி - |
| (இ) | ஜீவனோபாய அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்காக ரூபா 108.87 மில்லியன் ஏற்பாடுகள் கிடைத்திருந்த போதிலும் உள்ளவாறான செலவுகள் ரூபா 68.73 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் நிதி முன்னேற்றம் 63.13 சதவீதமாக இருந்தது. உணவு பாதுகாப்பு மற்றும் போசாக்கு உப செயற்திட்டதுக்காக இலக்குகள் நிறுவப்பட்டிருக்காததுடன், ஏனைய செயற்திட்டங்கள் போதிய இலக்குகளை நெருங்கிய முன்னேற்றம் 1 சதவீதம் முதல் 1.7 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 108.87 மில்லியன் தொகையில் ரூபா 60 மில்லியன் தொகையொன்று 2020.09.30 திகதிய இடைக்கால வாக்குப்படிக் கணக்கின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்தமையால் எதிர்பார்த்தவாறு நிகழ்ச்சித் திட்டங்களை திட்டமிட்டு செயற்படுத்துவதற்கு முடியாமல் போனது. அதன்படி தாமதமாக ஆரம்பிக்கப்பட்ட வேலைத்திட்டங்கள் 2021 ஆண்டின் போது தொடர்ச்சியாக செயற்படுத்தப்படுவதுடன், இவ்வாண்டில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | செயற்திட்டங்கள் தொடர்பாக உச்சமட்ட செயற்திறனுடன் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | இந்தியாவின் உதவியின் கீழ் நிர்மாணிக்கப்படும் வீடமைப்புச் செயற்திட்டத்தில் 1890 வீட்டு அலகுகள் நிர்மாணிப்பதற்காக திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 1,466 வீட்டு அலகுகள் மாத்திரம் பூர்த்தி செயயப்பட்டிருந்ததுடன், வீடுகள் எதுவும் நலன்பெறுவோருக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. | இந்திய உதவிச் செயற்திட்டத்திற்கான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதற்காக 2020 ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்காமையால் வீடுகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகள் வழங்குவதற்கு முடியாமல் போனதுடன் அதன் காரணமாக வீடுகள் நலன்பெறுவோருக்கு வழங்க முடியாமல் போனது. | பூர்த்தி செய்து உரிய நலன்பெறுவோருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் (Outcome) பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) சுழல் நிதியம் ஒன்று ஏற்படுத்தி கடன் வழங்கப்பட்டிருந்ததுடன், முதலாவது கட்டத்தின் கீழ் நிதியம் ஆரம்பிக்கப்பட்ட நாளில் இருந்த 2010 ஆண்டு வரை ரூபா 9,210,760 இற்கான கடன் வழங்கப்பட்டிருந்தது. 2013 ஜனவரி 30 திகதி வரை அவற்றில் ரூபா 4,223,343 தொகை மாத்திரம் சேகரிக்கப்பட்டிருந்ததுடன், மீதித் தொகை சுழல் நிதியத்திற்கு பதிவழிக்கப்பட்டிருந்தது. இரண்டாம் கட்டத்தின் கீழ் 2016 ஜனவரி 26 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட மீதியாகிய ரூபா 8,758,443 இற்கான சுழல் நிதியத்திற்கான இலங்கை வங்கியுடன் புதிய உடன்படிக்கை ஒன்று கையொப்பமிடப்பட்டு நலன்பெறுவோருக்கு கடன் வழங்கப்பட்டிருந்ததுடன் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வழங்கியிருந்த கடன் தொகையினை மீண்டும் அறவீடு செய்யப்பட்ட முன்னேற்றம் பின்வருமாறு ஆகும்.<br><br>(i) 2016 ஆகஸ்ட் மாதத்தில் முதல் வட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டிருந்த நலன் பெறுவோர் இருவரிடம் ரூபா 183,466 இற்கான மீதியொன்று அறவிடப்பட்டிருக்கவில்லை.<br>(ii) 2017 ஆண்டின் இரண்டாவது வட்டத்தின் கீழ் கடன் வழங்கப்பட்டிருந்த 05 நலன்பெறுவோரிடம் அறிவிடப்பட வேண்டியிருந்த ரூபா 120,297 தொகை நிலுவையாக காணப்பட்டது.<br>(iii) 2016 ஆண்டில் கடன் வழங்கியிருந்த 03 நலன்பெறுவோர் குறிப்பிட்ட கடன் தொகையை பெறப்பட்ட காரணத்திற்காக ஈடுபடுத்தியிருக்கவில்லை | ஏற்றுக்கொள்கின்றேன். சுழல் நிதியத்தின் 35 நலன் பெறுவோரில் 28 பேர் தற்போது கடன் தொகையை முழுமையாக செலுத்தியுள்ளனர். 04 நலன்பெறுவோர் கடன் தவணை செலுத்தி வருகின்றனர். மூன்று நலன்பெறுவோர் கடன் தவணைகள் செலுத்துவதை புறக்கணித்துள்ளனர். கடன் செலுத்துவதை புறக்கணித்துள்ள கடன் பெறுவோரின் கடன் தொகையை அறவீடு செய்வதற்காக உரிய நடவடிக்கை எடுக்கும் படியும் பெருந்தோட்ட சமூக தொடர்பாடல் வசதிகள் வழங்கும் உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சுழல் நிதியத்தின் அலுவல்கள் முறையான மேற்பார்வையின் கீழ் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் நிறைவேற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| எனவும், அது தொடர்பாக 2020 திசெம்பர் 31 திகதி வரையும் போதிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) அமைச்சினால் பெருந்தோட்டத் துறையில் அனைவருக்கும் அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளுடன் பாதுகாப்பான வீடுகள் மற்றும் வதிவிடங்களை உரித்தாக்கும் பிரதான குறிக்கோளுடன் செயற்படுத்தப்பட்ட வீடமைப்பு செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்த்த நலன்களை நெருங்கும் முன்னேற்றம் பின்வருமாறு ஆகும்.<br>(i) பசுமை தங்க வீடுகள் நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 4007 வீட்டு அலகுகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் அவற்றில் 2225 வீட்டு அலகுகள் மாத்திரம் நலன் பெறுவோருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அவை பூர்த்தி செய்யப்பட்ட எண்ணிக்கையின் 55 சதவீதம் ஆகும். 2016, 2017 மற்றும் 2018 ஆகிய ஆண்டுகளின் போது உட்கட்டமைப்பு வசதிகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட 177 வீடுகளும், உட்கட்டமைப்பு வசதிகள் இன்றி பூர்த்தி செய்யப்பட்ட 574 வீடுகளும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் நலன் பெறுவோருக்கு வழங்கியிருக்கவில்லை.<br>(ii) 2018 ஆண்டின் பின்னரான காலப் பகுதியில் பூர்த்தி செய்யப்பட்ட வீடுகள் நலன் பெறுவோருக்கு வழங்கியிருக்காததுடன், கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் படி அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக்கொள்கின்றேன்.<br><br>பல்வேறு காரணங்களை காட்டி நலன் பெறுவோர் இந்த வீடுகளை பெற்றுக்கொள்வதற்கு முன்வராமையால் நலன் பெறுவோருக்கு ஒப்படைப்பதற்கு முடியாமல் இருந்ததுடன், நலன் பெறுவோருக்கு ஒப்படைக்காத வீடுகள் தொடர்பான தகவல்களை கண்டறிந்து அவை வீடுகள் தேவையான ஏனைய நலன் பெறுவோருக்கு வழங்குவதற்கு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு குறித்துக்கொண்டேன். | வீடமைப்பு செயற்திட்டங்களின் மூலம் எதிர்பார்த்த நலன்களை நெருங்குவதற்கு உச்ச மட்ட செயற்திறனுடன் செயற்பட வேண்டும். |
| (இ) அமைச்சினால் 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது 07 வலயங்களில் 55 தோட்டங்களை உள்ளடக்கி ரூபா 292,025,000 | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் இது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகள் | வீடுகளுக்காக அறவீடு செய்யப்பட வேண்டிய தொகை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | தொகை பெறுமதியான 1,159 வீட்டு அலகுகள் நலன் பெறுவோருக்கு கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் 282 வீட்டு அலகுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 77,550,000 தொகையில் 2020 திசெம்பர் 31 திகதி வரை பணம் ஏதும் அறவீடு செய்திருக்கவில்லை. | கணக்காய்விற்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். | எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி அமைச்சினால் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவீடு செய்திருந்த மொத்தத் தொகை ரூபா 73,070,941 தொகையாக காணப்பட்டதுடன், அது மொத்தக் கடன் தொகையில் 25.02 சதவீதமாகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | கடன் தொகை அறவீடு செய்தல் உச்ச மட்ட செயற்திறனுடன் செயற்படுத்த வேண்டும். |

## 3.5 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பசுமை தங்க வீடுகள் செயற்திட்டத்தின் கீழ் 2016, 2017 மற்றும் 2018 ஆண்டுகளில் தொடர் வேலையாக காணப்பட்ட 1026 வீட்டு அலகுகளின் நிர்மாண வேலைகள் 2020 ஆண்டின் போது இடைநிறுத்தப்பட்டதாக முன்னேற்ற அறிக்கையில் காட்டப்பட்டிருந்ததுடன், 482 வீட்டு அலகுகளுக்காக வேலை ஆரம்பிக்கும் கிரயம் ரூபா 67,120,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இந்த தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | செலுத்தப்பட்ட தொகை, புதிய செயற்திட்டத்தின் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த பில் பத்திரங்களுக்காக அணவல் செய்யப்பட்டது. | அமைச்சுக்கு அறவிடப்பட வேண்டிய தொகையினை விரைவாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.6 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது கேகாலை மற்றும் காலி வலையங்களில் முறையே 45 வீட்டு அலகுகள் மற்றும் 8 அலகுகள் நிர்மாணிப்பதற்காக ஆரம்ப வேலைப் | 2015 – 2019 ஆண்டுகளின் போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்காக மேலதிக ஏற்பாடுகள் | செயற்திட்டங்கள் குறிப்பிட்ட காலப் பகுதியில் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பகுதிக்காக 20 சதவீத முற்பணம் மற்றும் முகாமைத்துவ கட்டணம் ஆக ரூபா 3,770,000 தொகை பெருந்தோட்ட மனித அபிவிருத்தி பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை கருமங்கள் ஏதும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. அதன்படி செயற்திட்டம் நிறைவேற்றுவதில் தாமதம் 03 வருடங்களை மிகைத்திருந்ததுடன், அக் கருமங்கள் நிறைவேற்றப்படாமைக்கான காரணம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | விண்ணப்பித்திருந்த போதிலும், ஆண்டிற்கான அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் இருந்து செலவுகள் மேற்கொள்ளும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், இவ் வருடத்திற்கான செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்காக இவ்வாண்டின் ஏற்பாடுகளை பயன்படுத்தப்படுவதனால் மேலதிக ஏற்பாடுகள் கிடைக்கும் வரை செயற்திட்டங்களின் கொடுப்பனவுகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. அதன் காரணமாக கடந்த ஆண்டுகளின் போது வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனது. | |
| (ஆ) | 2017 ஆண்டின் போது நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட ஹட்டன், நுவரஎலிய, கண்டி, இரத்தினபுரி, கேகாலை மற்றும் காலி ஆகிய 06 வலயங்களில் 06 மாதங்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 211 வீட்டு அலகுகளில் 33 மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் அதன் பூர்த்தி செய்யப்பட்டவற்றின் முன்னேற்றம் 15.6 சதவீதமாகிய குறைந்த மட்டமாகும். இந்த வீட்டு அலகுகளுக்கான மதிப்பீட்டு கிரயம் ஆகிய ரூபா 114,088,522 இல் ரூபா 76,759,144 தொகை மாத்திரம் 2020 திசெம்பர் 31 திகதி வரை செலவிடப்பட்டு 67 சதவீத நிதி முன்னேற்றம் ஒன்றினை மாத்திரம் பெற்றிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஆண்டின் போது நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த ஹட்டன், நுவரஎலிய மற்றும் கண்டி ஆகிய 03 வலயங்களில் 205 வீட்டு அலகுகளில் வீடுகள் ஒன்றேனும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், செயற்திட்டத்தின் பூர்த்தி செய்தல் முன்னேற்றம் சூனியம் ஆக இருந்த போதும் அதற்கான மதிப்பீட்டுக் கிரயம் ஆகிய ரூபா 144,429,002 தொகையில் ரூபா 72,810,466 தொகை மாத்திரம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு செலவிடப்பட்டு 50 சதவீத நிதி முன்னேற்றம் மாத்திரம் அடைந்துகொண்டிருந்தது. வீட்டு செயற்திட்டங்கள் தொடர்பாக அரசாங்க நிதியம் பயன்படுத்துவதில் வெற்றிகரத் தன்மை ஒன்று காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. | - மேற்படி- | - மேற்படி - |
| (ஈ) | 2017, 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்த 120 உட்கட்டமைப்புச் செயற்திட்டங்களில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்த எண்ணிக்கை 75 ஆக மாத்திரம் இருந்ததுடன், 45 செயற்திட்டங்களின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**3.7 பணம் விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் முன்னேற்றம் ஒன்று பெற்றிருக்காத செயற்திட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் வீட்டுச் செயற்திட்டங்களின் கீழ் 150 புதிய வீடுகள் நிர்மாணிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் போர்டீஸ் தோட்டத்தில் 19 வீட்டு அலகுகள் நிர்மாணிப்பதற்காக எதுவித வேலையும் ஆரம்பிக்கப்படாதிருக்காத போதிலும் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 570,000 தொகை முகாமைத்துவக் கட்டணமாக பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | குறிப்பிட்ட செயற்திட்டம் தொடர்பாக கொடுப்பனவுகள் முறையான மேற்பார்வையில் மட்டும் கட்டுப்பாட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.8 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வறுமை ஒழிக்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்காக ரூபா ஒரு மில்லியன் செலவிடப்பட்டுள்ளதாக வருடாந்த செயலாற்றல் அறிக்கையில் காட்டப்பட்டிருந்த போதிலும் 2020 ஆண்டின் முன்னேற்ற அறிக்கையின் படி உள்ளவாறான செலவு ரூபா 33.16 மில்லியன் தொகையாக இருந்தது. | செயலாற்றல் அறிக்கையை கணினி மயப்படுத்தலில் ஏற்பட்ட தாமதம் காரணமாக மில்லியன் ஒன்றென பதியப்பட்டிருந்ததுடன், அது ரூபா 33.16 மில்லியன் தொகை என திருத்தப்பட வேண்டும். | உரிய தகவல்கள் சரியாக சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அமைச்சுச் செயலாளரின் SMEHCI/2/3/17 இலக்கம் கொண்ட 2021 ஜனவரி 25 திகதிய கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான பதவியணி எண்ணிக்கை 295 எனினும், வருடாந்த செயலாற்றல் அறிக்கையின் படி 288 என காட்டப்பட்டிருந்தது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | - மேற்படி - |

**3.9 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்திய அரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்படும் 4,000 வீட்டு அலகு செயற்திட்டம் மூன்று வருட காலத்தில் பூர்த்தி செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்தது. 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சுமார் ஐந்து வருடங்கள் கழிந்திருந்த போதிலும் கட்டம் I மற்றும் II இன் கீழ் பூர்த்தி செய்யப்பட்டிருந்த வீடுகளின் எண்ணிக்கை 3,576 மாத்திரம் ஆகும். அவற்றில் நலன் பெறுவோருக்கு வழங்கியிருந்த வீடுகளின் எண்ணிக்கை 699 ஆகும். | ஏற்றுக்கொள்கின்றேன்.<br><br>வீடுகள் நிர்மாணிப்பதற்காக காணிகள் ஒதுக்குவதில் காணப்பட்ட சிக்கல்களின் காரணமாக நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதில் தாமதம் காணப்பட்டது. | வெளிநாட்டு உதவி செயற்திட்டங்கள் உச்ச மட்ட செயற்திறனுடன் குறிப்பிட்ட காலப் பகுதியில் பூர்த்தி செய்து நலன் பெறுவோருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மேலும், 83 வீட்டு அலகுகளின் அலுவல்கள் ஆரம்பிக்கப்படாமல் காணப்பட்டது. | | |
| (ஆ) | மேற்கூறிய வீடமைப்புத் செயற்திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் முதல் பகுதியில் 5,000 வீடுகளுக்காக முகாமைத்துவக் கட்டணம் செலுத்துவற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்திருந்ததுடன், 2019 ஆண்டின் போது ரூபா 10 மில்லியன் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2020 திசெம்பர் 31 திகதி வரை நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முதல் கட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படும் 4,000 வீட்டு அலகுகள் தொடர்பாக அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளும் பூர்த்தி செய்யப்பட்டு, அவ்வீடுகள் நலன் பெறுவோருக்கு ஒப்படைப்பதற்கு முடியுமானவாறு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி செயற்திட்டத்துடன் நிர்மாண வேலைகள் 2021.09.30 திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | - மேற்படி - |

**3.10 பெறுகைகள்**

--------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 31 திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த ரூபா 2,982,000 தொகை பெறுமதியுடைய மல்டிமீடியா புரொஜக்டர் மற்றும் எக்டன்ஷன் பவர்கோட் உபகரணங்கள் 2020 ஒக்தோபர் 20 திகதி அமைச்சுக்கு கிடைக்க வேண்டியிருந்த போதிலும் அவ் உபகரணங்கள் 2020 நவம்பர் 18 திகதி கிடைத்திருந்ததென அவதானிக்கப்பட்டது. | இடைக்கால வாக்குப்படி கணக்கின் மூலம் வழங்கியிருந்த ஏற்பாடுகள் குறிப்பிட்ட காலப்பகுதியில் முடிவடைவதனால் அந்த கொள்வனவுக்கான காசோலை முதலில் தயாரிக்க நேரிட்டது. | பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்பட வேண்டும். |
| (ஆ) | ரூபா 10,733,750 இற்கான உபகரணக் கொள்வனவுக்காக 2020 ஆகஸ்ட் 30 திகதி கட்டளை ஒன்று பிறப்பிக்கப்பட்ட போதிலும் பெறுகை வழிகாட்டல் கைநூல் 8.9.3 மற்றும் பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.9 இன் பிரகாரம் அமைச்சினால் வழங்குனருடன் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திட்டிருக்கவில்லை. மேலும், பெறுகை வழிகாட்டல் கோவையின் 8.12.3 இன் பிரகாரம் அந்த கொடுப்பனவு மேற்கொள்ள முன்னர் கோவை விபரக் குறிப்புகளுடன் மற்றும் ஏற்றுக் | ஏற்றுக்கொள்கின்றேன். எதிர்காலத்தில் அவ்வாறு நடைபெறாமல் இருப்பதற்காக உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தியுள்ளேன். | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | கொண்ட விதிமுறைகளுக்கு இணங்கியுள்ளது என நிலையப் பொறுப்பு அதிகாரியினால் சான்றிதழ் ஒன்று வழங்கியிருக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செயற்படாமல் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (இ) | விலைகூறல் ஆவணங்களில் அடங்கியிருந்த நிபந்தனைகளின் படி கொடுப்பனவு மேற்கொள்ளல் குறிப்பிட்ட உபகரணங்கள் அமைச்சுக்கு கிடைத்த பின்னர் எனினும், i5 Desktop Computer, UPS மற்றும் Wireless printers என்பவற்றிற்காக ரூபா 11,695,366 தொகை 2020 ஆகஸ்ட் 31 திகதி செலுத்தியிருந்த போதிலும் இந்த உபகரணங்கள் 2020 நவம்பர் 30 திகதி முதல் 2021 ஜனவரி 12 வரை இடைப்பட்ட காலத்திலேயே அமைச்சுக்கு கிடைத்திருந்தது என அவதானிக்கப்பட்டது. | இந்த காலப் பகுதியில் கொரோனா தொற்றுநோய் நிலைமை உலகம் பூராகவும் பரவிக் காணப்பட்டமையால் பண்டப் போக்குவரத்து நடைபெற்றது. குறிப்பிட்ட கப்பல் பண்டங்களுடன் திருப்பி அனுப்பப்பட்டமையால் பண்டங்கள் பெறுவதில் தாமதங்கள் ஏற்பட்டது என அறிவிக்கின்றேன். | - மேற்படி - |

## 3.11 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தொண்டமன் ஞாபகார்த்த மன்றத்தின் கீழ் கூட்டுத்தொகை ரூபா 399,000 தொகை பெறுமதியான BBN 9715 மற்றும் இலக்கம் BDK 5469 ஆகிய 02 மோட்டார் சைக்கிள்கள் வருட இறுதி வரை செயற்படாமல் காணப்பட்டதுடன், அவற்றில் BBN 9715 மோட்டார் சைக்கிள் வீடமைப்பு அமைச்சிக்கு வழங்கியுள்ளதென வாய்மொழி மூலம் அறிவிக்கப்பட்டது. அதற்கான எழுத்துமூல சான்றுகள் மற்றும் 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான ஓட்ட அட்டவணைகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | சேவையின் தேவை மீது மோட்டார் சைக்கிள் இணைக்கப்பட்ட சாரதி எங்கள் அமைச்சிலிருந்து நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்கு தற்காலிகமாக இணைக்கப்பட்டதுடன், நிலவிய கொரோனா தொற்றுநோய் நிலைமையின் மீது கடமைகளை நிறைவேற்றுவதற்காக இந்த மோட்டார் சைக்கிள் அச் சாரதிக்கு வழங்கப்பட்டது. இது செயலாளரின் அறிவுரையின் படி வழங்கப்பட்டிருந்தது. இந்த | அமைச்சுக்கு சொந்தமான வாகனங்கள் உச்சமட்ட செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கும் உண்மையான விபரங்கள் சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மோட்டார் சைக்கிளிற்கு எச் சந்தர்ப்பத்திலும் எரிபொருள் வழங்கப்படாமையால் ஓட்ட அட்டவணைகள் வழங்கப்படவில்லை. | |
| (ஆ) | PA – 1442 கொண்ட மிட்சுபிசி கப் வண்டிக்காக 2017 ஆண்டு முதல் 2020 ஆண்டு வரை ரூபா 1,679,213 தொகை பராமரிப்புச் செலவு மேற்கொண்டிருந்த போதிலும் 2020 ஆண்டில் 10 மாதங்களை விட மிகையான காலம் செயற்படாமல் காணப்பட்டதுடன், திருத்த வேலைகள் முறையான மேற்பார்வையின் கீழ் நடைபெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2020 ஆண்டு மார்ச் மாதத்திற்கு முன்னர் திருத்தி வேலைக்காக உள்நாட்டு முகவர் நிலையமான யுனைடட் மோட்டர்ஸ் இற்கு அனுப்பப்பட்டிருந்ததுடன், நிலவும் கொரோனா தொற்றுநோய் நிலைமை மீது அந்த நிறுவனம் 02 மாதங்களை விட கூடிய காலம் மூடப்பட்டிருந்தமை இந்த முகவர் நிலையத்தினால் உதிரிப் பாகங்கள் காணப்படவில்லை என அறிவித்திருந்தது. பின்னர் இரண்டாம் முன்றாம் கொரோனா அலைகள் வந்த பின்னர் அந்த நிறுவனத்தின் வேலைக்ள் மேலும் வீழ்ச்சி அடைந்திருந்தது.<br>எவ்வாறாயினும், தற்போது அந்த வாகனத்தின் எஞ்சினை திருத்துவற்காக எதிரிசிங்க சகோதரர்கள் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | வாகன திருத்தி வேலைகள் மேற்பார்வையுடன் மேற்கொள்ளப்பட்டு அந்த வாகனங்களின் மூலம் உச்ச மட்ட நலன்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | NC – 9910 இலக்கம் கொண்ட வாகனம் சென்ட்ரல் பினேன்ஸ் நிறுவனத்திடம் இருந்து செயற்படு லீஸீங் உடன்படிக்கையின் கீழ் 05 வருடங்களுக்கு மாதாந்த தவணை ரூபா 199,293 தொகை வீதம் குறைந்த அளவு 3000 கிலோமீற்றர் ஓட்ட அடிப்படையின் மீது பெற்றிருந்தது. சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 09 மாதங்களுக்காக 27,000 கிலோமிற்றர்கள் ஓடவேண்டியிருந்த போதிலும் 9,822 கிலோமீற்றர்கள் குறைவாக ஓட்டப்பட்டிருந்தது. | NC – 9910 இலக்கம் கொண்ட வான் வண்டி உடன்டிக்கையின் படி ஓட வேண்டிய உச்சமட்ட கிலோமீற்றர் எண்ணிக்கை 3,000 கி.மீ. ஆகும். | குறிப்பிட்ட வாகனங்களை உச்ச மட்ட செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | அமைச்சுக்கு சொந்தமான 04 வாகனங்கள் வேறு அமைச்சுக்களுக்கும், மேலும் 04 வாகனங்கள் இந்த அமைச்சின் கீழ் | அமைச்சின் விடயப் பரப்புக்கள் மாற்றமடைதல் காரணமாக புனர்வாழ்வு மீள்குடியேற்ற மற்றும் இந்து | குறிப்பிட்ட வாகனங்கள் அமைச்சின் உச்சமட்ட செயற்திறனுடன் பயன்படுத்துவற்கு அல்லது |

| | | |
|---|---|---|
| காணப்படும் வேறு நிறுவனங்களுக்கும் மேலும் 04 வாகனங்கள் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு விடுவிக்கப்பட்டிருந்தது. | மத விவகார அமைச்சிலிருந்து கிடைத்திருந்த 04 வாகனங்கள் மீண்டும் அந்த அமைச்சுக்கு வழங்கப்பட்டதுடன், தற்காலிகமாக அந்த அமைச்சுக்கு சேவையின் தேவையின் மீது இந்த அமைச்சின் கீழ் காணப்படும் மேலும் 04 வாகனங்கள் வழங்கப்பட்டன. அமைச்சின் அபிவிருத்தி திட்டங்களின் மேற்பார்வைக்காக அமைச்சின் கீழ் காணப்படும் பெருந்தோட்ட மனித அபிவிருத்தி நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கு 04 வாகனங்கள் தற்காலிகமாக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது அவற்றின் 03 வாகனங்கள் அமைச்சுக்கு பெறப்பட்டுள்ளது. | முறைப்பிரகாரம் சாட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.12 நட்டங்கள் மற்றும் சேதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுடன் காணப்பட்ட நட்டங்கள் மற்றும் கைவிடல் தொடர்பான கூற்று (குறிப்பு i) ஆண்டின் போது நடைபெற்ற நட்டங்கள் மற்றும் சேதங்கள் தொடர்பாக அறிவிக்க வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது ஏற்பட்டிருந்த ரூபா 1,679,168 இற்கான நட்டம் தொடர்பான பதிவுகள் உட்படுத்தியிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றேன்.<br><br>சரி செய்வதற்கு குறித்துக்கொண்டேன். | உரிய பதிவுகள் உரிய முறையில் உட்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.13 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஒவ்வொரு ஒப்பந்த வேலைகளிலும் முகாமைத்துவக் கட்டணம் என 4 சதவீதம் மற்றும் 4.5 சதவீதம் என | முன்னைய அமைச்சுச் செயலாளரின் தலைமையில் நடைபெற்ற அமைச்சின் | உரிய அதிகாரத்தின் மூலம் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| முறையான அதிகாரம் தொடர்பான கவனம் இன்றி பீஎச்டீட நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டிருந்தது. | முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தில் 4% மற்றும் 4.5% உட்கட்டமைப்பு வசதிகள் செயற்திட்டத்திற்காக முகாமைத்துவக் கட்டணக் கொடுப்பனவு செய்தல் தொடர்பாக கலந்துரையாடி தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி, ரூபா ஒரு மில்லியனுக்கு மிகையான கிரயத்தை உடைய செயற்திட்டத்திற்காக 4% உம் ரூபா ஒரு மில்லியனுக்கு குறைவான கிரயத்தை உடைய செயற்திட்டங்களுக்காக 4.5% உம் செலுத்துவதற்கு தீர்மானித்திருந்தது. | |

## 3.14 வருடாந்த பண்டக் கணிப்பீடு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி. 756 இன் பிரகாரம் 2020 ஆண்டிற்காக பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப்பட்டு கணிப்பீட்டு அறிக்கை 2021 மார்ச் 31 அளவில் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்காமையால் நிலையான சொத்துக்களின் பௌதீக உளமை தொடர்பாக மெய்மையாய்தல் செய்ய முடியாமல் இருந்தது. 2019 ஆண்டின் வருடாந்த பண்ட கணிப்பீட்டு அறிக்கை 2021 ஜனவரி 27 திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | பதில் வழங்கியிருக்கவில்லை. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்களை நெருங்குதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அமைச்சினால் இனங்கண்டிருந்த நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் 04 இன் கீழ் அதற்குரிய இலக்கு நிகழ்ச்சித் திட்டங்கள் 07 | இடைக்கால வாக்குப்படி கணக்கின் கீழ் நிதி அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டமையால் ஏற்பாடுகள் தொடர்பாக | நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோளை நெருங்குவதற்கான உச்சமட்ட செயற்திறனுடன் செயற்பட்டு எதிர்பார்த்த |

| | | |
|---|---|---|
| செயற்படுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டு இறுதியளவில் 05 நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பாக எதிர்பார்த்த வெளியீட்டு மட்டம் 1.8 சதவீதம் முதல் 48.13 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | எதிர்வுகூறுவதற்கு வசதியின்மையும் சில திட்டமிடப்பட்ட நிர்மாண வேலைகள் கொவிட் - 19 தொற்றுநோய் நிலைமை மத்தியில் தாமதம் ஏற்பட்டதால் எதிர்பார்த்த முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது. | வெளியீட்டு மட்டத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**5. நல்லாளுகை**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நி.பி. 134(2) பிரகாரம் நிதி அலுவல்கள் தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டுத் திட்டம் 2020 ஜனவரி 01 திகதி முதல் 2020 ஏப்ரல் 30 திகதி வரை மாத்திரம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன், ஒட்டுமொத்த ஆண்டிற்குமான நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டின் முதல் 04 மாதங்களுக்காக மாத்திரம் பாதீட்டின் இடைக்கால வாக்குப்படி கணக்கின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளின் மீது குறிப்பிட்ட கணக்காய்வுத் திட்டம் தயாரிக்கப்பட்டது. எனினும், 2020 மார்ச் மாதம் முதல் கொரோனா தொற்றுநோய் காணப்பட்டதுடன், அதன் மூலம் அலுவலக விடயங்களுக்கு ஏற்பட்ட தடைகள் காரணமாக நாளதுவரை ஆக்குவதற்கு முடியாதிருந்தது. | நிதிப் பிரமாணங்களின் படி செயற்பட வேண்டும். |

**6. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 324 ஆக காணப்பட்டதுடன் உள்ளவாறான பதவியணி 295 ஆக காணப்பட்டமையால் 40 ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்பட்டன. அவற்றில் சிரேஷ்ட மட்டத்தில் 09 பதவிகள் முக்கியமாக நிரப்பப்படாமல் காணப்பட்டன. | சிரேஷ்ட நிறைவேற்று மற்றும் நிறைவேற்று மட்டத்தில் 09 பதவிகள் நாடளாவிய சேவையில் அடங்குவதுடன் இப் பதவிக்கான ஆட்சேர்ப்பு அமைச்சு மட்டத்தில் மேற்கொள்வதற்கு முடியாதுள்ளதுடன், அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்காக நடவடிக்கை | தேவையினை கவனத்தில் எடுத்து அத்தியவசிய பதவிகளின் வெற்றிடங்களை விரைவாக நிரப்பி அமைச்சின் அலுவல்களை முறைப்பிரகாரம் நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | எடுக்கும் படி நியமன அதிகாரிகளான அரச சேவை மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அடிக்கடி அறிவிக்கப்பட்டது. | |
| (ஆ) | *அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினை அதிகரித்துக்கொள்ளாமல் ஆரம்ப மட்ட சாரதிகள் மற்றும் அலுவல உதவியாளர்கள் 08 பதவிகளில் மிகைகள் காணப்பட்டதுடன் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படும் 03 பதவிகளுக்காக ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.* | *மலைநாட்டு புதிய கிராமங்கள், உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சிற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணி, தோட்ட வீடமைப்பு சமூதாய உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு என மாற்றம் செய்யும் போது முகாமைத்துவ சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் குறைக்கப்பட்டிருந்தது. எனினும், அங்கீகரிக்கப்பட்டிருந்த சாரதி பதவியணி மற்றும் அலுவலக உதவியாளர் சேவை போதியளவாக காணப்படாமையால் அந்த எண்ணிக்கையை அதிகரிக்கும் படி முகாமைத்துவ பணிப்பாளர் நாயகத்திற்கு விண்ணப்பிக்கப்பட்டது.*<br><br>*அமைச்சுக்கு தேவையான அலுவலக ஊழியர் சேவை மற்றும் சாரதி சேவை தேவைக்குரிய பதவியணியினர் பல்கரும அபிவிருத்தி பணிக்குழு திணைக்களத்தில் இருந்து பெற்றுக்கொள்ளும் இயலுமை தொடர்பாக வினவும் படி முகாமைத்துவப் பணிப்பாளர் நாயகத்தினால் அறிவிக்கப்பட்டிருந்தது. அதன்படி மிகை என சுட்டிக் காட்டப்பட்டுள்ள பதவி எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்காக தற்போது நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.*<br><br>*ஆரம்ப தரத்தில் வெற்றிடங்கள் காணப்படும் 03 பதவிகளுக்காக தற்காலிக அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.* | அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணிக்கை மீது வெற்றிடங்களை நிரப்புவதற்கும் மிகைகளுக்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். |